# ஞானச்சுடர்

மலர் 6 இதழ்

[illegible] 1995

DIGITIZED

[illegible]

[illegible]


207741

# ஞான

மாதப் பத்திரிகை.

— மாசி —

REGISTRAR OF BOOKS
4 - APR 1955
MADRAS



— சிவபூஜை —

## விலை 4 அணா.

இம்மாத ஜன்மராசி,
நக்ஷத்திர பலன்கள்
அடங்கியுள்ளன.

# “ஞானகுரு”

தமிழ் மாதம் முதல்தேதி தோறும் வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிகை. அணா 4.

இந்தியா வருடச்சந்தா ரூ. 3. எந்த மாதத்திலிருந்தும் சந்தா சேரலாம். சிலோன், சிங்கப்பூர், பினங்கு முதலிய வெளிநாடு ரூ. 4. வி. பி. கிடையாது. சந்தா மணியார்டர் செய்க. 6மீ சந்தா இல்லை.

விளம்பர விகிதம்:— உள் பக்கம் ரூ. 20. ½ பக்கம் ரூ. 10. ¼ பக்கம் ரூ. 5. ராப்பர் வெளிப்பக்கம் ரூ.50. ராப்பர் உள்பக்கம் ரூ 40.

“ஞானகுரு” போஷகர்கள்:- (1) ஸ்ரீ V. S. M. [illegible]ஜாராமய்யர், *மதுரை.* (2) ஸ்ரீ M. R. வித்தியாசாகர், *மதுரை.* (3) ஸ்ரீ V. S. M. மோஹன்ராம், *மதுரை.* (4) ஸ்ரீலஸ்ரீ ஸாது சுவாமிகள், *பழனி.* (5) ஸ்ரீ P. N. S. K. சீதாராமய்யர், *மதுரை.* (6) ஸ்ரீ S. R. நரசிமமாச்சாரியார், *மதுரை.* விசேஷபோஷகர் துகை ரூ. 501. சாதாரணபோஷகர் துகை ரூ.101.

☞ *போஷகர் துகை செலுத்தியவரின்* குண விசேஷங்களைப் பற்றி ஒரு பக்கம் பிரசுரிப்பதன்றி, ஒவ்வொரு மாதமும் அவருடைய பெயர் ஞானகுருவில் பிரசுரிக்கப்படும். (சித்திரை, தீபாவளி மலர் விலை 6 அணா.)

*ஆசிரியர்:—* S. G. இராமலிங்கம், B. A., *சொற்பொழிவாளர்.*

“ஞானகுரு” ஆபீஸ், 5, கான்பாளையம் 3-வது தெரு, *மதுரை.*

Editor:- S. G. RAMALINGAM, B. A.,

**“GNANA GURU” Office, 5, Khanpalayam 3rd St., MADURAI.**

---

☞ *மதுரை ஜில்லாவுக்கு கணிக்கப்பட்ட* ஞானகுரு *திருக்கணித* பஞ்சாங்கம், *மன்மத ௵ சித்திரை ௴ முதல் தொடர்ந்து ஞான குருவில் வெளியாகும்.*

---

## ஜன்மராசி நக்ஷத்திரப் பலன்களைக் கவனிப்போர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு.

*நிகழும் ஜய ௵ மாசி, பங்குனி மாதங்களிலே குரு பகவானும், சனி பகவானும் முறையே மிதுனத்திலும், துலாத்திலும் சஞ்சரிப்பதால், கோசார ரீதியாக கஷ்ட பலன்களைப் பெறுகிற அடியிற் கண்ட ராசிக்காரர்கள் மாத்திரம் குரு பகவானுக்கு குரு வாரத்திலும், சனி பகவானுக்கு சனி வாரத்திலும் அர்ச்சனை செய்து வழிபட்டுவந்தால், தோஷங்கள் விலகி சுபிட்சமும், சுகமும் உண்டாகுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

மேஷராசி (3ல் குரு *பொல்லாதவர்*) குரு பகவானுக்கு *அர்ச்சனைசெய்து வழிபடவும்.* மிதுனராசி - குரு; கடகராசி - குரு, *சனி;* கன்னியாராசி - குரு, *சனி;* துலாராசி - *சனி;* விருச்சிகராசி - குரு *சனி;* மகரராசி - குரு, *சனி;* மீனராசி - குரு, *சனி.*

---


செந்தமிழ்நாட்டுச் செல்வச் சிறுவர்களுக்கு திடகாத்திரமளிக்கும் சிறந்த உணவு

எங்கள் ராஜா பார்லி பிஸ்கட்.

ஸ்தாபிதம் 1926

போன் நிர். 334.

ராஜா பார்லி பிஸ்கட்ஸ்

குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.

நேம் அன் டிசைன் ரிஜிஸ்டர் நிர். **143106.**

ராஜா பிஸ்கட் கம்பெனி, 115, திண்டுக்கல் ரோடு, *மதுரை.*

கிளை:— மெயின் ரோடு, *திண்டுக்கல்.*

*ஏஜெண்டுகள்.*

| | | |
|---|---|---|
| ஸ்ரீ | *மக்கி & கோ.* ... ... | *திருநெல்வேலி.* |
| ,, | S. *ஷண்முகக் கோனார்* ... ... | *கோவில்பட்டி.* |
| ,, | A. S. *பாலையா நாடார்* ... ... | *சாத்தூர்.* |
| ,, | M. K. *அழகராஜா* ... ... | *இராஜபாளையம்.* |
| ,, | V. A. *ரத்தினசாமி அன் V. பழனிச்சாமி* ... | *சின்னமனூர்.* |
| ,, | N. *அழகர்சாமி நாயுடு* ... ... | *ஸ்ரீவில்லிபுத்தூர்.* |
| ,, | K. V. D. *& சன்ஸ்* ... ... | *போடிநாயக்கனூர்.* |
| ,, | A. *முத்திருளாண்டி பிள்ளை, 3 லாந்தர் பக்கம்,* | *பெரியகுளம்.* |
| ,, | R. *சீனிவாச அய்யங்கார்* ... ... | *நத்தம்.* |
| ,, | K. *சுப்பையா பிள்ளை* ... ... | *மதுரை.* |
| ,, | S. P. K. *நடராஜன் செட்டியார்* ... ... | *மதுரை.* |
| ,, | M. R. N. *ஆச்சாரி* ... ... | *மதுரை.* |
| ,, | L. V. *ஷண்முகம் பிள்ளை, டவுன்ஹால் ரோட்,* | *மதுரை.* |

உரிமையாளர்: *ஆ. சங்கு பிள்ளை.*


---

ர் அபூர்வ சந்தர்ப்பம்! நெசவுத் தொழிலாளர்களே! மில் தொழிலாளர்களே!

இத்தருணத்தை இழக்காதீர்கள்!

இக்கதையை நீங்கள் அவசியம் படிக்கவேண்டும்!

## இரண்டு நெசவுத் தொழிலாளர்கள்!

(“ஞானகுரு” ஆசிரியர் எழுதியது.)

*நெசவுத் தொழிலைச் செய்துகொண்டே வாழ்க்கையின் இன்பங்களை நுகர்ந்த வாலிபன் வத்சலாராஜன்! கண்டதே காட்சி கொண்டதே கோலமாய்த் திரிந்து, கடைசியில் திருந்தி, வாழ்க்கையில் படித்து மேன்மை பெற்றவன் ஏகாம்பரன்! இரு வாலிபர்களின் வாழ்க்கைச் சித்திரங்களை உங்கள் அகக்கண்முன் கண்டு ஆனந்தமடையுங்கள்.* இது ஞானகுரு ஆசிரியர் எழுதிய 19-வது கதை. ஞானகுரு மன்மத வருஷப்பிறப்பு மலரில் *இக்கதை 48 பக்கங்களில் வெளியாகிறது. விலை 6 அணா. வழக்கம்போல் ஜன்மராசி நக்ஷத்திரப்பலன்கள், கதைகள், கட்டுரைகள் வெளியாகின்றன.*

9—3—1955 *புதன்கிழமைக்குள் முன்பணம் அனுப்புவோர்க்கு* 100 *பிரதிகளுக்கு* ரூ. 31—4—0 *ஆகும்.*

“ஞானகுரு” பதிப்பகம், 5, கான்பாளையம் 3-வது தெரு, மதுரை. (S. I.)

20794)





# என். எம். பி.

குளுகோ &

பார்லி பிஸ்கட்ஸ்

குழந்தைகளுக்கு இணையற்ற உணவு

உரிமையாளர்:-

என். எம்.

பொன்னுச்சாமி பிள்ளை,

59, கோரிப்பாளையம், மதுரை.

பிராஞ்சு:-

20, தளவாய் அக்ரஹாரம்,

மதுரை.

# எங்கள் பிரசித்திபெற்ற தயாரிப்புகள்

| | |
|---|---|
| பாரத் இங்க் | மாலா கண் மை |
| பாரத் மார்கிங் இங்க் | சிபாகோ டாய்லட் பவுடர் |
| பாரத் ரப்பர் ஸ்டாம்பு இங்க் | குமாரி கண் மை |
| கேசரி இங்க் பவுடர் | காமதேனு பிரஞ்ச் பாலிஷ் |
| பாரத் நீலகிரி தைலம் | சிவபதி மருந்து |
| காமதேனு நீலகிரி தைலம் | சிபாகோ இன்செக்ட் பவுடர். |
| பாரத் டின்சர் அயோடின் | பெல் பிராண்ட் சீல் அரக்கு |
| பாரத் வாசனை சாந்து | பெல் பிராண்ட் ஆபீஸ் |
| மாலா டாய்லட் பவுடர் | லிக்விட் கம் (பசை) |

*Manufacturers:—*

பாரத் இண்டஸ்டிரியல் ஒர்க்ஸ்,

32, மஹால் 5-வது தெரு, மதுரை.


மாலை 6 — மலர் 11 13—2—1955. ] ஞானகுரு [ ஜயவருஷ மாசிமீ 1௳

## பொருள் அடக்கம்.


| | பக்கம். | | பக் |
|---|---|---|---|
| அறிஞர்களின் அமுதமொழிகள், | | மாசி மாத ஜன்மராசி, நக்ஷத்திரப் பலன்கள் | |
| பொற்றாமரை மலர் மிதப்பு விழா | 1 | ஞானகுரு முருகன் திருவருள் | |
| ஸ்ரீமத் பகவத்கீதை வெண்பா | 2 | ஆறு எண்கள் கூட்டல் | |
| ப்ரபோத ஸுதாகரம் | 3 | போட்டி-3 — 18,000 புண் | |
| ...க்கிரன் | 5 | ணிய அதிர்ஷ்ட அனுக்கள். | |


## —: அறிஞர்களின் அமுதமொழிகள் :—

உனது ஆத்மாவை அறி; உலகத்தையும், இறைவனையும் அறிவாய்; ஆத்மசாக்ஷாத்காரம் பெறு. உலகிற்கு நீ செய்யக்கூடிய மிகவும் மகத்தான சேவையின் சொருபம் இதுவே. இடமும் காலமும் கடந்த பிரஹ்மம் நீயென்று உணர்ந்துகொள். இந்த பிரஹ்மம் மகோன்னதமானது, மாறுத ...ற்றது, நித்தியமானது, அகண்டாகாரமானது, சர்வ வியாபகமானது, நிபந்தனைக்குட்படாதது, ஆனந்தவடிவானது. — சுவாமி சிவானந்தர்.

## மதுரை, பொற்றாமரை குளத்தில் பொற்றாமரை மலர் மிதப்புவிழா.

மதுரை, ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோவிலில் உள்ள பொற்றாமரைக் குளத்தில், பொன்னாலான தாமரை மலர் ஒன்றை மிதக்கவிடும் வைபவம் 2—2—55௳ நடைபெற்றது. மதுரை ஜில்லா நீதிபதி ஸ்ரீ எஸ். ரெங்க ராஜன் அவர்கள் பொன்னாலான தாமரை மலரை மிதக்கவிட்டார். பல்லா யிரக்கணக்கான மக்கள் பார்த்து கரகோஷம் புரிந்து குதூகலித்தனர்.

இந்த பொற்றாமரை மலர் திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள் உபயத்தால் செய்யப்பட்டது.

இவ்விழாவிற்கு மதுரைக்கோவில் நிர்வாக அதிகாரி ஸ்ரீ டி. எச். விவேகானந்தம் பிள்ளை தலைமை வகித்தார். வரவேற்புரைக்குப்பின் கோவில் டிரஸ்டிகள் போர்டு தலைவர், தார்மீக சார்வபௌம கே. எம். எஸ். லெக்ஷ்மணய்யர் விழாவை துவக்கி வைத்துப் பேசினார். ஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரானின் உதாரகுணத்தை சிலாகித்து, அன்னார் இதுவரை ரூ. 30 லக்ஷம் வரை தர்ம காரியங்களில் செலவிட்டுள்ளாரென்றும், அது மேலும் தொடர்ந்து நடந்து, திருவாதவூர் திருப்பணிக்கும் உதவவேண்டு மென்றும் தலைவர் கேட்டுக்கொண்டார்.

திருப்பனந்தாள் மடத்துக் கல்லூரி தலைமைப்பேராசிரியர் ஸ்ரீ கே. எம். வெங்கட்ராமய்யர், மதுரை, நகரசபைத் தலைவர் ஸ்ரீ ஏ. சிதம்பர முதலியார், எம். எல். ஸி, ஸ்ரீ எஸ். தருமலிங்க முதலியார், திருவாடுதுறை ஆதீன வித்வான் வீரசிவசுப்ரமண்யம் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

கடைசியாக, இவ்விழாவை ஏற்பாடு செய்த காசிமடம் ஆசிருதம் ஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டர் எல்லோருக்கும் வந்தனோபசாரம் கூறினார். ஆரம்பத்தில் ஸ்ரீ எஸ். சைலப்ப ஓதுவார் தேவாரம் பாடினார்.

# ஸ்ரீமத் பகவத் கீதை வெண்பா

(மதுரை, தோ. ரா. ப. அவர்கள் எழுதியது)

## பதினொன்றாவது அத்தியாயம். (தை மலர் தொடர்ச்சி.)

32 சங்கரிக்குங் காலன்யான் இவ்வுலகைச் சங்கரிக்க
இங்குவந் தோனென் றெனையுணர்வாய் — இங்குள்ள
வீரரை நீபொருது வீழ்த்தாயே யானாலும்
சாருமவர் சாவெனவே சாற்று.

33 புகழுடையப் போர்புரிவாய் பூமியெலாம் ஆணை
நிகழுமா றுன்பகையை நீக்கி — இகலெல்லா
மென்னால் முனமே இறந்தழிந்து மாண்டனரால்
உன்னை நிமித்தமென வுன்னு.

34 வீட்டுமது ரோணருடன் வீரனுங் கன்னனும்
நீட்டிய வில்விற் சலத்திரதன் — கூட்டமாய்
வந்துளோ ரென்னால் மரணமடைந் துளரால்
சிந்தையி லச்சமின்றித் தீரமாய் — நிந்தையிலா
சண்டையிது செய்வாய் சயமுனின தாயிடுமால்
பண்டை முடிவிதுவே பார்.

35 கேசவன் சொன்னவுரை கேட்டுச் சிரந்தாழ்ந்து
தேசுயர் பார்த்தன் திடமிழந்து — பேசுமுரை
பின்னிழுக்கக் கைகூப்பி பீதியினால் மெய்விதிர்த்து
சொன்னதெலாஞ் சொல்வன் தொடுத்து.

### அர்ஜுனன்.

36 இம்மையி லுன்னையே ஏற்றிடவே இவ்வுலகோர்
செம்மையாய்ச் சிந்தை களித்திடுவர் — அம்ம!
அரக்கர் பயந்தொழிதல் சித்தர் சிரந்தாழ்தல்
பொருத்தமா மென்றே புகல்.

37 ஏற்று திருக்கவெனில் எவ்வா றமையுங் கொல்
போற்றிப் பரம புகழதனைச் — சாற்றியே
தேவேசா வென்பர் அனந்தா வயன்றனக்கு
மேலீசா வென்பர் வியனுலகை — யாளீசா
என்றுதுதி செய்திடுவர் சத்தேசத் தென்றும்
அன்றிவற்றிற் கப்பாலா யாதாரவாய் — நின்றிருக்கும்
நாசமிலா நற்பொருளே நாதா நவிலரிய
தேசுயரு நின்ருட் டிறம். (தொடரும்)

ஞானகுரு மாதப் பத்திரிகையில் தொடர்ந்து
விளம்பரம் செய்யுங்கள்.



# ப்ரபோத ஸுதாகரம்.

சென்னை, பிரம்மஸ்ரீ N. பாலசுப்பிரமண்ய செட்டியார் அவர்கள்
மொழிபெயர்த்தது..

## 7. ஆத்மஸித்தி ப்ரகரணம் (தொடர்ச்சி)

(91) ஏனென்றால் செத்த பிராணியின் தேகம் — இந்திரியங்கள் — அதை சுடலையில் சுடும்போது ஏற்படுகிற தஹனத்தாலுண்டாகும் துக்கத்தினனுபவம் அதற்கு உண்டாவதில்லை. ஒருவேளை இந்த அனுபவம் ப்ராணனுக்கே உடையது என்றாலே தூங்கிவிட்ட பிறகும் ப்ராணன் விழிப்புடனேதான் வேலை செய்துகொண்டிருக்கிறது. அந்நேரத்திலே திருடன் துஷ்ட ப்ராணிகள் முதலானவைகளாலுண்டாகும் ஹானிகளை (விபத்துக்களை) அந்த ப்ராணன் அறிந்துகொண்டாயிருக்கிறது? இல்லை.

(92) இந்த அறியுந்தன்மை மனதின் விஷயமாயிருக்குமென்றாலோ அது ஒரே தடவையாக எல்லாவற்றினுடைய அனுபவத்தை ஏன் அறிவதில்லை? வாஸ்தவத்திலே அந்த மனம் ஸ்வாதீனமுடையது அன்று; அது பராதீனமுடையதுவேதான். ஏனென்றால் அது ஸ்வதந்திரமுடையதுவேயானால் அதனுடைய ஏமாற்றக் காலத்திலே, அதனை ப்ரமாதத்திலிருந்து (மறதியிலிருந்து) எவன் காப்பாற்றினான்?

(93 & 94) அடர்ந்த இருளோடு கூடிய ஒரு அறையிலே தரையின்மீது ஒளிமிகுந்த ஒரு தீபத்தை ஏற்றிவை. அதன்மீது ஐந்து துளைகளுள்ள பானையை கவிழ்த்து (மூடி) விடு. அதன் வெளியில் ஒவ்வொரு துவாரத்தின் முன்னிலையில் வரிசையாக அழகான வீணை, கஸ்தூரி, ரத்னம், விசிறிகளை வைத்துவிடு. இப்போது அந்த பானையின் துவாரத்தின் வழியே வெளியே வீசுகின்ற தேஜஸின் அம்சங்களாலே எந்த வெவ்வேறான வஸ்துக்களுடைய ஞானம் உண்டாகிறதோ அது எதனால் உண்டாகிறது? துவாரத்தினாலேயா? குடத்தாலேயா? மண்ணினாலேயா? உள்ளே வைத்துள்ள கலசத்தினா (தீபத்தின் கலசம்) லேயா? அல்லது அதனில் நிரப்பியுள்ள தைலத்தாலேயா? அல்லது அதிலே போட்டிருக்கும் வத்தியாலேயா? இவைகளெல்லாம் ப்ரத்யக்ஷ விருத்தமாயிருப்பதனாலே இவைகளில் எதனாலேயுங்கூட அந்த விஷய ஞானம் உண்டாகிறதென்று சொல்ல சரியானபடி இடமில்லை. அதனாலே இந்த வஸ்துக்களின் ஞானம் உண்டாவதற்கு அந்த ஒரு தீபத்தின் ஜோதி ப்ரகாசம் ஒன்றுதான் காரணமாகியிருக்கிறது. இதுபோல சரீரத்திலேயும் ஒவ்வொரு ஞானத்தின் ஆதாரமும் ஆத்மாவாகியே யிருக்கிறது.

ஆத்மஸித்தி ப்ரகரணம் முற்றிற்று.

## 8. மாயாஸித்தி ப்ரகரணம்.

(95) சின்மாத்திரமான பரமாத்மாவே முதன் முதல் தான் தன்னையே தன் ரூபத்தோடு நோக்கிற்று. அப்போது அதன் பெயர் "அகங்காரம்" என்று ஆயிற்று. இதனாலே பேதத்துக்கு அதுவே மூலமாயிற்று.

(96 & 97) பிருகதாரண்ணியக உபநிஷத்தின் சாகையிலே யாக்ஞவல்க்யரின் சொல் மூலமாக உபநிஷத்தானது சொல்லுவது என்னவென்றால் இவ்விதமாக அது இரண்டாக ப்ரதீதியாயிற்று. அதிலிருந்து பதி பத்னிகளுடைய ஆவிர்பாவமுண்டாயிற்று. அப்போது இதை ஆகாயம் (ஆகாயத்துக்குச் சமானமான சூனிய ப்ராயனான புருஷன்) ஸதா ஸ்திரீயின் மூலமாக பூரணனாகிறான். அந்த ஸ்திரீ பார்த்தாள். அப்போது அவளிடமிருந்து மனிதர்களின் உற்பத்தி ஆயிற்று.

(98) வெகு காலமாக ஆனந்தானுபவம் செய்து செய்து, பரமாத்மாவுக்கு சுஷுப்திக்குச் சமானமான ஒரு அவஸ்தை உண்டாயிற்று. அதனாலே ஸ்வப்னத்துக்கு ஈடான மாயை ஆவிர்பாவமடைந்தது.

(99) இந்த மாயையானது, ஸத்துக்கும் அஸத்துக்கும் வேறானது. அனாதியானது. ஸதா பரமாத்மாவை ஆச்ரயமாக உடையது. இந்த த்ரிகுணாத்மிகையான மாயையே சராசரங்களான ஜகத்தை உண்டாக்கிற்று.

(100) சொல்லப் போனால் மாயையோ அவ்யக்தம். (வெளிப்பட்டுத் தோன்றாதது) அவ்விதமான அவ்யக்த மாயை இந்த வ்யக்த (வெளிப்படையான) ப்ரபஞ்சத்தை எப்படி உண்டாக்க முடிந்தது? என்றால் அத்ருஸ்ய ரூபமான ஸூக்ஷ்மமான நூலால் திருஸ்ய (ஸ்தூலமான) மான சேலை எப்படி உண்டாயிற்று?

(101 & 102) ஸ்வப்னத்திலே ஸ்திரீ ஸம்போகத்தின் அனுபவம் உண்டாகும்போது எந்த விதமாக சுத்த வஸ்திரத்திலே வீர்ய பாதம் உண்டாகிறதோ, அவ்விதமாகவே அவ்யக்தமான ப்ரக்ருதியிலிருந்து வ்யக்தமான ஜகத்து உண்டாயிற்று. விழித்தெழுந்த பிறகு ஸ்வப்ன ரமணமானது மித்யையாகிவிடுகிறது. ஆயினும் வஸ்திரமானது வீரியத்தால் முற்றிலும் கெட்டுவிடுகிறது. ஸ்வப்னாவஸ்தையிலேயும் புருஷனே ஸத்தியமாகவே யிருக்கிறான். மற்றோ ஸ்திரீ அஸத்யமாகிறாள். அவர்களிருவர்களின் சேர்க்கையும் பொய்யாகவே முடிகிறது. பிறகு வீர்யபாதம் ஸத்தியமாகவே ஆகிறது. இவ்விதமாகவே இந்த விஷயத்திலேயும் அத்ருச்யமான மாயையினாலே த்ருச்யமான ப்ரபஞ்சமானது உண்டாதல் ஏற்படுகிறது.

(தொடரும்)

## சுக்கிரன்.

"ஸ்ரீ"

(தை மலர் தொடர்ச்சி)

தேவயானை தந்தை சுக்ரனை அவமதித்த சர்மிஷ்டை தனது தாசி போன்றவளென்று மேலும் வசையாக மொழிய, சர்மிஷ்டை தேவயானையைப் பிடித்து பக்கத்திலிருந்த ஒரு பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டு, அவளது ஆடையணிகளையுங் கவர்ந்து சென்றுவிட்டாள்.

தற்செயலாக தாகவேட்கை தணித்துக்கொள்ள அப்பக்கம் வந்த யயாதி மஹாராஜன் தேவயானைக்கு தனது மேலங்கவஸ்திரத்தை ஆடையாகக் கொடுத்து அவளுக்குத் தன் கை கொடுத்து கிணற்றிலிருந்து கரையேற்றி விட்டான். ஒரு புருஷனது கரந் தீண்டப்பட்டு தனது லஜ்ஜையைக் காப்பாற்றிக்கொண்ட தேவயானை யயாதியைத் தன் புருஷனாக வரித்துக்கொண்டு, தந்தை சுக்ரனிடம் நடந்த விருத்தாந்தத்தை எடுத்துரைத்தாள். சுக்ரனும் நிலைமையை எண்ணி வருந்தி, யயாதியிடம் செல்லத் திட்டமிட்டார்.

நிற்க, சர்மிஷ்டையின் கொடூரச் செயலைக் கேள்வியுற்ற விருஷபர்வா என்ற அரசன் சுக்ரனிடம் ஓடி பெண்ணின் குழந்தை புத்தியை மன்னிக்கும்படி வேண்டினான். 'சுக்ரன் கொடூரத்திற்கு இரையான தனது தேவயானையிடம் முறையிட அரசனை வற்புறுத்தினார். தேவயானை தன்னை அவமானம் செய்த சர்மிஷ்டை தனது ஏவலாளாகவும் தாசியாகவும் இருக்க வேண்டுமென விருஷபர்வாவுக்கு ஆக்ஞையிட, அரசனும் குற்றஞ்செய்த தனது பெண்ணை அவ்விதமே தண்டித்து தேவயானையிடம் ஒப்படைத்தான்.

சுக்ராசார்யர் தேவயானையை யயாதிக்குத் திருமணம் செய்வித்து, சர்மிஷ்டையை தேவயானையின் தாசியாக நியமித்து, வீடு திரும்பினார் என்பது கதை. எனவே பெண்கள் எக்காரணத்தைக் கொண்டும் தனித்துச் செல்வது பிசகு என்பது புலனாகிறது.

— 5 —

"கச்ச-தேவயானி" என்ற பிரஸித்தமான கதையை ஆராய்வோம். தேவயானை — தேவயானி (2ம் ஒரு பொருள்).

தேவர்களின் குருவான பிரஹஸ்பதியின் பிள்ளையின் பெயர் கசன். கசன் என்ற பெயரை கச்சன் என்று நாம் கூறுகிறோம். அசுரர்களின் குருவான சுக்ரனின் செல்வக் குமாரி தேவயானி. சுக்ரனுக்கு "மிருதசஞ்சீவினி" என்ற மந்திரம் தெரியுமென்று சென்ற அத்யாயத்தில கூறியுள்ளேன். இந்த மந்திர உச்சாடனத்தால் இறந்தவர்களை உயிர்ப்பிக்க முடியும். பூரண சரீரத்துடன்

மரணமடைந்தாலும், சரீரம் பின்னம் செய்யப்பட்டு வியோகமானா லும், இறந்தவுடன் சரீரம் அக்னிக்கு விநியோகம் செய்யப்பட்டு பஸ்மம் (சாம்பல்) ஆகியிருப்பினும் சரி, எந்த நிலையில் அஸ்தி காணப்பட்டாலும் 'மிருது சஞ்சீவினி' மந்திரத்தால் எழுப்பி, முன்னிருந்த சரீர நிலையில் யாரையும் உயிர்ப்பிக்க முடியும். இப் படிப்பட்ட ஆச்சரியமான சஞ்சீவி மந்திரத்தை சுக்ரனும், பரமேஸ்வரனும் தவிர, வேறு யாரும் அறியவில்லை.

எனவே தேவர்களுக்கு எப்படியும் இந்த மந்திரத்தை சுக்ர னிடமிருந்து தெரிந்துகொள்ள ஆவலுண்டாயிற்று. அவர்கள் ஒன்றுகூடி பிரஹஸ்பதியின் புத்ரன் கசனை, சுக்ரனிடம் சிஷ்யனாக அமர்ந்து அம் மந்திரோபதேசம் பெற்று திரும்பி வந்துவிட, கேட்டுக்கொண்டனர்.

கசன் சுக்ராச்சார்யரை யணுகி, மாறுவேஷத்தில் சிஷ்யனாக அமர்ந்தான். கசனுடன் தேவயானியும் அப்பாவிடம் வித்யாப் யாசம் செய்தாள். கசனும் தேவயானியும் நெருங்கிய நண்பர்களா யினர். தேவயானி கசனிடம் பிரேமை காரணமான வாத்ஸல்யம் மேலிட பழகிவந்தாள். ஆனால் கசன் குரு புத்ரியான தேவயானி யை சகோதரி என்ற பாவனையுடன் பழகிவந்தான். சுக்ரன் 'மிருது சஞ்சீவினி' என்ற மந்திரத்தைத்தவிர ஏனைய பாடங்களை கசனுக்குக் கசடற உபதேசித்தார். கசன் தான் வந்த காரியம் ஈடே றாதது கண்டு யோசித்தவண்ணம் காலத்தைப் போக்கிவந்தான்.

நிற்க, தேவயானியும் கசனும் நெருங்கிப் பழகுவதை விரும் பாத ராக்ஷஸர்கள் கசனைப் பிடித்துக் கொன்று சமுத்திரத்தில் தள்ளிவிட்டனர். கசனைப் பிரிந்த தேவயானி விசனமுற்று, விஷ யம் அறிந்தவுடன், தந்தையிடம் முறையிட்டு, கசன் இல்லாமல் தான் உயிர்வாழ முடியாது என்று தெரிவித்தாள்.

குமாரியின் விருப்பத்திற்கிணங்கி, சுக்ர பகவான் 'மிருது சஞ் சீவினி' மந்திரத்தைக்கொண்டு கசனை உயிர்ப்பித்தார். உயிர் பெற்றெழுந்த கசனைக் கண்ட ராக்ஷஸர்கள் மறுபடியும் அவனைக் கொன்று சாம்பலாக்கி, சாம்பலைப் பாலில் கலந்து சுக்ரனுக்குக் கொடுத்துவிட்டனர்.

மறுபடியும் தேவயானியின் மனோரதம் கோணாமல் சுக்ரன் கசனை உயிர்ப்பிக்க நினைத்ததும், தனது வயிற்றில் பாலுடன் கலந்த சாம்பலாக கசன் இருப்பதை உணர்ந்தார்.

"கசன் வேணுமா? தந்தை வேணுமா?" என்று தேவயானி யை சுக்ரன் கேட்டார். ஏனெனில் வயிற்றிலிருக்கும் கசனை எழுப் பினவுடன் சுக்ரன் வயிறு வெடித்து இறப்பாரல்லவா?

(தொடரும்)

# 1955ஆம் பிப்ரவரி 13௳ முதல் மார்ச்சு 14௳ வரை.

# ஜன்மராசி, நக்ஷத்திர பலன்கள். [ஜயஆம் மாசிம்]

| | | | |
|---|---|---|---|
| செ. | | | குரு கே. |
| சூ. | பிப்ரவரி 13௳ காலை 6 மணிக்கு கிரக நிலை. | | |
| பு. | | | |
| சுக். ரா. | | சனி சந். | |

*கிரகப் பெயர்ச்சிகள்:-*

பிப். 16௳ மேஷத்திற்கு செவ்வாய்
,, 26௳ மகரத்திற்கு சுக்ரன்
மார். 11௳ கும்பத்திற்கு புதன்

மேஷ ராசி:- (அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய) இலக்கினாதிபதி செவ்வாய் பிப். 16௳ சுயராசி ஸ்வாம்சத்திற்கு வருவதால், பிப். 21 தேதிக்குள் கீர்த்தி காரிய மும், சுகபோகங்களும் உண்டாகும். பிப். 26௳ முதல் 28௳ வரை, பகை வர்கள் பணிவார்கள். தொழிலில் சமாரான யோகம் உண்டு. மார். 7, 8, 9 தேதிகளில் மேலதிகாரிகளு டன் அல்லது யஜமானர்களுடன் சம்பள விஷயமாய்ப் பேச்சு எடுக்க லாகாது. அதிர்ஷ்ட நாட்கள்:- பிப். 20, 21, 23, மார். 4, 9, 10, 11 தேதிகள். 2 சந்திராஷ்டமங்கள்:- பிப். 14௳ திங்கள் இரவு 8 மணி முதல் 17௳ வியாழன் காலை 10 மணி வரையும், மார்ச் 14௳ திங்கள் காலை முதல் 16௳ புதன் மாலை 6 மணி வரை, 2 சந்திராஷ்டமங்கள் உண்டு. அசுவனி ந-பி-து, தேக சௌக்கியமுண்டு, தொழில் முடை, விவகாரம், க்ஷேமம் உண்டாம்; பிப். 23௳ வரை சுக லாபமும் குடும்ப ஒற்றுமையும் உண்டு. பரணி ந-பி-து, தைரியத்தினால் தன லாபங்களும், தொழிலில் முன்னேற்றமும், பிப். 18௳ முதல் 21௳ வரை குடும்ப ஒற்றுமை சுகமும், தன லாபங்களும், தாயாதிகளின் ஒற்றுமையும் ஏற்படும்.

விருஷப ராசி:- (கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகணி, மிருக சீரிஷம் 2-ம் பாதம் முடிய) இலக்கினாதிபதி சுக்ரன் பிப். 26௳ முதல் மகரத்தில் சஞ்சரிப்பதால், எதிர்பார்த்த காரியங்கள் நடைபெறு. திரேக சுகத்திற்குப் பங்கம் உண்டு. ஆனால் வண்டி, வாகனம், நிலம், வீடு இவைகளில் முன்னேற்றம் காணப் படுகிறது. குடும்பத்தில் குட்டிக்கல வரங்கள் வாரமற் பார்த்துக்கொள்க. தொழிலில் மந்தம் காணப்படுகிறது. பிப். 28, மார். 1, 2 தேதிகளில் சத்து ருக்கள் தோற்றுவீழ்வார்கள். மார். 9, 10, 11 தேதிகளில் மேலதிகாரி களுடன், யஜமானர்களுடன் பதவி சம்பளம் விஷயமாய்ப் பேசக் கூடாது. அதிர்ஷ்ட நாட்கள்:- பிப். 17, 23, 24, 25, மார். 4, 9, 10, 11 தேதிகள். சந்திராஷ்டமம்:- பிப். 17௳ வியாழன் காலை 10 மணிமுதல் 19௳ சனி இரவு 8 மணி வரை உண்டு. கிருத்திகை ந-பி-து, தொழி லில் மிக்க மந்தமும், குடும்ப விவ காரமும். இளைய சகோதர க்ஷேம மும் உண்டு; பணமுடை அதிகம். ரோகணி ந-பி-து, சகல சுபிட்சங் களும், தொழிலில் வேகமும், பகை யும் உண்டு; களத்திரத்தின் மூலம் செலவுகள் ஏற்படும். தாயாதிகள் வம் புக்கு வருவார்கள். மிருகசீரிஷம் ந-பி-து, தொழிலில் மந்தம் காணப் படுகிறது; நினைத்த காரியங்கள் தடைப்படும்; சிலருக்கு களத்திர பீடை உண்டாகலாம்; தாயாதிகள் எதிரிகளாகி விவகாரம் செய்வார்கள்.

மிதுன ராசி:- (மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் முடிய) இலக்கினாதிபதி புதன் அஷ்டமத்திலிருப்பதால், தேக அசௌக்யமும், நிஷ்டூரமும் உண்டு. மூத்த சகோதரர்கள் அனுகூலஞ் செய்வார்கள். களத்திர சுகம் உண்டு. தொழிலில் முற்போக்கும், அனுகூலங்களும், லாபங்களும் உண்டாகும். வண்டி, வீடு, வாகனம், நிலம் இவற்றில் அனுகூலங்கள் இல்லை. மார். 2, 3, 4 தேதிகளில், சத்துருக்கள் தோற்றுப்போவார்கள். மார். 11, 12, 13 தேதிகளில் பதவி சம்பளம் சம்பந்தமான பேச்சுக்களில் ஈடுபடலாகாது. அதிர்ஷ்ட நாட்கள்:- பிப். 17, 23, 24, 25, மார். 10, 11 தேதிகள். சந்திராஷ்டமம்:- பிப். 19உ சனி இரவு 8 மணி முதல் 21உ திங்கள் முடியவும் உண்டு. திருவாதிரை ந-பி-து, களத்திர ஒற்றுமையும், தொழிலில் முற்போக்கும், லாபமும் உண்டாகும்; வண்டி, வீடு, நிலம் இவற்றில் மார். 8உ முதல் 11உ வரை அனுகூல லாபங்கள் ஏற்படும். புனர்பூசம் ந-பி-து, குடும்பத்தொல்லைகளும், தொழிலில் மந்தமும் காணப்படும்; பிப். 18உ முதல் 21உ வரை புத்திரர்களுக்கு சுகமுண்டு.

---

கடக ராசி:- (புனர்பூசம் கடைசி பாதம்முதல் பூசம், ஆயில்யம்முடிய) இலக்கினத்தை விரயாதிபதியும் அஷ்டமாதிபதியும் பார்ப்பதால், நேர்மையும், நாணயமும் தவறலாகும்; நிஷ்டூரங்கள் உண்டாகும். பிப். 26உ முதல் வண்டி, வீடு, நிலம் இவற்றில் முற்போக்கும், சாதகமும் உண்டு. களத்திர பீடைகள் காணப்படுகின்றன. பிப்ர. 16உ முதல் தொழிலில் முற்போக்கும் அனுகூலமும் காணப்பட்டாலும், இடைஞ்சல் உண்டாகும். குடும்பத்தில் ஒற்றுமை தென்படுகின்றது. பந்துமித்திரர்களிடமிருந்து நற்செய்திகள் கிடைக்கும். சகோதர அனுகூலங்கள் அற்ப சொற்பமெனலாம். மார். 4, 5, 6 தேதிகளில் பகைவர்களின் பலம் சிதறுண்டுபோகும். பிப். 14, 15, 16, 17, மார். 14, 15, 16 தேதிகளில் மேலதிகாரிகளுடனோ, யஜமானர்களுடனோ பதவி சம்பளம் விஷயமான பேச்சுக்களில் ஈடுபடலாகாது. அதிர்ஷ்ட நாட்கள்:- பிப். 17, 20, 21, 25, மார். 4, 9, 10, 11 தேதிகள். சந்திராஷ்டமம்:- பிப். 22உ செவ்வாய் காலை முதல் 23உ புதன் முடியவும் உண்டு. பூசம் ந-பி-து, களத்திர வர்க்கத்தாரால் அனுகூலங்களும், உபகாரங்களும் கிடைக்கும்; மார். 11உ முதல் 14உ வரை வீடு, வண்டி, நிலம் இவைகளில் சாதகமான நிலையும் முற்போக்கும் கட்டாயம் உண்டு; பந்துமித்திரர்களிடமிருந்து விகித அனுகூலங்கள் ஏற்படும். ஆயில்யம் ந-பி-து, கண்டச்சனியின் கஷ்டங்களும், விரய ஸ்தானத்து வியாழனின் விபரீதங்களும் வெருவாய் விலகும்; தாயாதிகளின் மூலம் அனுகூலமும் பணப்ராப்திகளும் உண்டு. பிப். 16உ முதல் 21உ வரை தொழிலில் பிரபல யோகம் உண்டாகும்; சிலருக்கு உத்தியோகத்தில் விசேஷ அனுகூலங்கள் ஏற்படும்; பிப். 18உ முதல் 21உ வரை வீடு, நிலம், வண்டி இவற்றில் லாபங்களும், பந்துமித்திர விகித அனுகூலங்களும் உண்டாகும்.

---

சிம்ம ராசி:- (மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய) இலக்கினாதிபதி சூரியன் 7 லிருந்தாலும், அஷ்டமாதிபதியின் பார்வை பெறுவதால் பயங்கரமான சொற்பனங்களும், திகிலும் உண்டாகும்.



உஷ்ணாதிக்க ரோகங்கள் பீடிதம் ஆகும். பணப்ராப்திகள் உண்டு. இளைய சகோதரர்களின் உதவி கிடைக்காது. வண்டி, வீடு, நிலம் இவற்றில் சாதகமான நிலை தென்படுகிறது; இம்மாதம் பிற்பகுதியில் தொழிலில் ஓரளவு முற்போக்கும், சாதகநிலையும் ஏற்படுகின்றன. களத்திர விரோதங்களினால் மனம் சிலருக்கு கலங்கும். அற்ப லாபத்திற்கும் அபூர்வ கஷ்டங்கள் படவேண்டிவரும். மார். 7, 8, 9 தேதிகளில் எதிரிகளின் கை ஓங்கிவிடும். பிப்ர. 17, 18, 19 தேதிகளில் சம்பளம், பதவி விஷயமான பேச்சுக்களில் ஈடுபடலாகாது. அதிர்ஷ்ட நாட்கள்:- பிப். 17, 20, 21, 23, மார். 9, 10, 11 தேதிகள். சந்திராஷ்டமம்:- பிப். 24உ வியாழன் காலை முதல் 26உ சனி மத்தியானம் 11 மணி வரை உண்டு. மகம் ந-பி-து, வண்டி, வீடு, நிலம் இவற்றில் மாதக்கடைசி வாரத்தில் அனுகூலங்கள் உண்டு. குடும்பக் கலவரங்களும், தொழிலில் வில்லங்கமும் ஏற்படும். பூரம் ந-பி-து, குடும்பத்தில் குதூகலங்களும், வாக்கினால் அனுகூலமும் உண்டு. புத்திர லாபமும், விகித அனுகூலங்களும் ஏற்படும். மார். 8உ முதல் 11உ வரை பணப்ராப்திகள் உண்டு.

---

கன்னியா ராசி:- (உத்திரம் 2-ம் பாதம்முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம்முடிய) இலக்கினாதிபதி புதன் பிப்ர. 26உ வக்ரகதி நீங்குவதால் அன்றுமுதல், சுபிட்சமும், நேர்மையும் நாணயமும், சுகமும் உண்டாகும். வீடு, நிலம், வண்டி இவற்றில் பிப். 26 தேதிக்குள் முற்போக்கும், லாபமும் உண்டு. தொழிலில் முன்னேற்றம் போலிருந்தாலும் அடிக்கடி சச்சரவுகள் காணப்படும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளுடன் மனஸ்தாபம் நேரிடலாம். களத்திர ஒற்றுமையும் சுகமும் பெருகிவரும். தாயாதிகள் மூலம் லாபமும் ஆதரவும் கிடைக்கும். மார். 9, 10, 11 தேதிகளில் பகைவர்கள் அபஜயமடைவார்கள். பிப். 20, 21 தேதிகளில் பதவி, சம்பளம் சம்பந்தமான பேச்சுக்களையே எடுக்கலாகாது. அதிர்ஷ்ட நாட்கள்:- பிப். 17, 20, 21, 23, 24, 25, மார். 4 தேதிகள். சந்திராஷ்டமம்:- பிப். 26உ சனி மத்தியானம் 11 மணி முதல் 28உ திங்கள் பிற்பகல் 2 மணி வரை உண்டு. உத்திரம் ந-பி-து, பணமுடை அதிகம்; என்றாலும், மார். 9, 10, 11 தேதிகளில் தனப்ராப்திகள் உண்டு, குடும்ப ஒற்றுமையும், வாக்கு நாணயமும் ஏற்படும்; தொழிலில் உத்தியோகத்தில் சாதகமான நிலை காணப்படுகின்றது. அஸ்தம் ந-பி-து, தொழிலில், உத்தியோகத்தில் முற்போக்கு என்றாலும் அடிக்கடி எதிரிகளின் தொல்லைகள் ஏற்படும்; லாபம் குறையும், முற்போக்கு பெரிதும் பாதிக்கப்படும்; பணப்ராப்திகள் பிப். 18உ முதல் 21உ வரை உண்டு. குடும்ப ஒற்றுமையும் ஏற்படும். சித்திரை ந-பி-து, வியாஜ்யங்களில் தோல்வியும், வீடு, வண்டி, நிலம் இவைகளில் சாதகமும் உண்டாகும்; தொழிலில் மந்தம் காணப்படும்; எதிர்பார்த்த காரியங்கள் நடைபெற மாட்டா.

---

துலா ராசி:- (சித்திரை 3-ம்பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய) இலக்கினாதிபதி சுக்கிரன் பிப்ர. 26உ மகரத்திற்குப் போவதால், அன்றுமுதல் குடும்ப நேர்மையும், வாக்கு நாணயமும், குதூகலங்களும் உண்டாகும். வண்டி, வீடு,

ந — பி — து = நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு.

நிலம் இவற்றில் சாதகமான நிலை காணப்படுகிறது. பந்துமித்திரர்களிடமிருந்து விகித அனுகூலங்கள் உண்டு. பிப். 16௳ முதல் தொழிலில், உத்தியோகத்தில் முற்போக்கும், அனுகூலங்களும் உண்டு. பிப். 12, 13, 14, மார். 11, 12, 13 தேதிகளில் பகைவர்கள் படுதோல்வி அடைவார்கள். பிப். 22, 23 தேதிகளில் பதவி பட்டம், உத்தியோக சம்பந்தமான முயற்சிகளில் பேச்சு வார்த்தை தொடங்கலாகாது. அதிர்ஷ்ட நாட்கள்:- பிப். 17, 20, 21, 23, 24, 25, மார். 4, 9, 10, தேதிகள். சந்திராஷ்டமம்:- பிப். 28௳ திங்கள் பிற்பகல் 2 மணி முதல் மார். 2௳ புதன் பிற்பகல் 4 மணி வரை உண்டு. சுவாதி ந-பி-து, இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டு; பிப். 16௳ முதல் 21௳ வரை பணப்ராப்திகள் உண்டு; குடும்ப ஒற்றுமை ஏற்படும்; கோர்ட்டு விவகாரங்களில் வெற்றி கிடைக்கும். விசாகம் ந-பி-து, புத்திரர் ஒற்றுமை உண்டாகும்; பிப். 16௳ முதல் 21௳ வரை பண வசதிகளும், குடும்ப சேர்மையும் உண்டு; மார். 7௳ திங்கள் இரவு 7 மணிக்கு மேல் உத்தியோகஸ்தர்களுக்கு உயர் சம்பளம், பதவி கிடைக்கும்; வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். இது நிச்சயமாய் நடைபெறும்.

---

விருச்சிக ராசி:- (விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய) இந்த ராசிக்காரர்களுக்கு இலக்கினாதிபதி செவ்வாய் பிப். 16௳ மேஷத்திற்கு வருவதால், சுகமும் சுபிட்சமும் சேர்மையும் நாணயமும் ஏற்படும். பணப்ராப்திகள் உண்டு; ஆனால் கஷ்டமும் கூடவரும். தொழிலில் மிக்க முன்னேற்றமும் லாபமும் ஏற்படலாகும். வீடு, நிலம், வண்டி இவற்றில் சாதகம் போல்தோன்றி பாதகம் உண்டாகுமாதலால், எச்சரிக்கையுடனிருத்தல் நலம். பந்துமித்திரர்களிடமிருந்து எதிர்பாராத தகவல்கள் கிடைக்கும். களத்திர சுகத்திற்குக் குறைவில்லை. பிப். 14, 15, 16, மார். 14, 15, 16 தேதிகளில் எதிரிகளை முறியடிப்பார்கள். பிப். 24, 25, 26 தேதிகளில் பதவி, சம்பளம் சம்பந்தமாய் யஜமானர்களுடனோ, மேலதிகாரிகளுடனோ பேச்சு வைத்துக்கொள்ளலாகாது. அதிர்ஷ்ட நாட்கள்:- பிப். 17, 20, 21, 23, 24, 25 மார். 10, 11 தேதிகள். சந்திராஷ்டமம்:- மார்ச். 2௳ புதன் பிற்பகல் 4 மணி முதல் 4௳ வெள்ளி இரவு 8 மணி வரை உண்டு. அனுஷம் ந-பி-து பணப்ராப்திகள் உண்டு; பிப். 15௳ முதல் 18௳ வரை தொழில், உத்தியோக சம்பந்தமான விவகாரம் வராமல் பார்த்துக்கொள்ளவும். ஷை தேதிகளில் களத்திர வர்க்கத்தாரின் உதவிகட்டாயம்கிடைக்கும் கேட்டை ந-பி-து, பணப்ராப்திகள் உண்டு; பிப். 19௳ முதல் மார்ச். 1௳ வரை தொழிலோ, உத்தியோகமோ மகா பாதகமான சூழ்நிலைகளில் காணப்படும், எச்சரிக்கை; மார். 4௳ முதல் 7௳ வரை களத்திர வர்க்கத்தார் மூலம் உதவியும் அனுகூலமும் ஏற்படும்; வண்டி, வீடு, நிலம் இவைகளில் சாதகமான நிலை தோன்றுகிறது.

---

தனுர் ராசி:- (மூலம், பூராடம் உத்திராடம் முதல் பாதம் முடிய) இலக்கினாதிபதி குரு பகவான் சப்தமகேந்திரத்திலிருந்து பார்த்தாலும் சனியின் பார்வையும் இருப்பதால் நாணயமும், தேக சுகமும் கெடுவதற்கு இடமேற்படும்; செலவுகள் அபாரமாகும், புத்திரர்கள் விஷய

307941



தில். மனம் சதா சஞ்சலமடையும். வீடு, நிலம், வண்டி, வாகனம் இந்த வகைகளில் முன்னேற்றம் உண்டு. பிப். 26௳க்குமேல் தொழிலில் முற்போக்கு ஏற்பட ஹேதுவாகும். களத்திர சுகமும், குடும்பத்தில் சேர்மையும் உண்டு. பிப். 17, 18, 19 தேதிகளில் சத்துருக்கள் தோற்றுப் போவார்கள்; பிப். 26, 27, 28 தேதிகளில் பதவி, சம்பளம் சார்பில், மேலதிகாரிகளைப் பேட்டி கண்டு பேசுதல் கூடாது. அதிர்ஷ்ட நாட்கள்:- பிப். 20, 21, 23, 24, 25, மார். 9, 10, 11 தேதிகள். சந்திராஷ்டமம்:- மார்ச். 4௳ வெள்ளி இரவு 8 மணி முதல் 6௳ ஞாயிறு முடியவும் உண்டு. மூலம் ந-பி-து, வண்டி, வீடு, நிலம் இவைகளில் அனுகூலங்கள் இல்லை; தனப்ராப்திகள் சுமார்; லாபம் போலத்தோன்றி தொழிலில் நஷ்டமேற்படலாம்; மார். 8௳ முதல் 11௳ வரை தொழிலில், உத்தியோகத்தில், வியாபாரத்தில் சாதகமானநிலைதென்படுகிறது. பூராடம் ந-பி-து, குடும்பத்தில் குதூகலங்களும், தொழிலில் லாபமும் ஏற்படும்; வீடு, வண்டி, நிலம் இவைகளில் சாதகமான நிலை ஏற்பட்டு லாபமே கிடைக்கும்; மார்ச். 8, 9, 10 தேதிகளில் களத்திர வர்க்கத்தார் மூலம் பொருளுதவி ஏற்படும்.

---

மகர ராசி:- (உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய) இலக்கினாதிபதி சனி, மிதுனம்சத்தில் சஞ்சரிப்பதால், மனச்சஞ்சலமும் கடன் பாதையும், நோய் பீடிதமும் ஏற்படும். பிப். 16௳ முதல் வீடு, நிலம், வண்டி இவற்றில் யோகம் உண்டு. புத்திரர்களுக்கு பீடைகள் கண்டு விலகும். தொழிலில் நெருக்கடி ஏற்படினும் சமாளிக்கும் திறமை ஏற்படும். பந்துமித்திரர்களிடமிருந்து விகித அனுகூலங்கள் ஏற்படும். பிப். 19, 20, 21 தேதிகளில், எதிரிகள் அடிபணிவார்கள். பிப். 28, மார். 1, 2 தேதிகளில் மேலதிகாரிகளுடன் அல்லது யஜமானர்களுடன் பேட்டி வைத்துக்கொள்ளக்கூடாது. அதிர்ஷ்ட நாட்கள்:- பிப். 21, 23, 24, 25, மார். 4, 10, 11 தேதிகள். சந்திராஷ்டமம்:- மார். 7௳ திங்கள் காலை முதல் 9௳ புதன் காலை 9 மணி வரை உண்டு. உத்திராடம் ந-பி-து, பணத்தட்டு ஏற்படும்; என்றாலும் சமாளிக்கும் சாமர்த்தியமும் உண்டு; தொழிலில் பெரும் மாறுதல் அல்லது ஏமாற்றம் ஏற்படக்கூடும்; வீடு, நிலம் இவற்றில் அனுகூலம் உண்டு. திருவோணம் ந-பி-து, இளைய சகோதர அனுகூலம் கிடைக்கும்; பந்துமித்திரர்களிடமிருந்து விகித அனுகூலம் ஏற்படும்; தொழிலில் முன்னேற்றம் உண்டு. அவிட்டம் ந-பி-து, குடும்பக் கவலையும், வீண் சண்டைகளும், இளைய சகோதரர்களிடத்தில் விரோதமும் உண்டாகும்; பிப். 18௳ முதல் 21௳ வரை தொழிலில் முற்போக்கான நிலை ஏற்படும்.

---

கும்ப ராசி:- (அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய) இலக்கினாதிபதி சனி 9ல் குருவின் கதியில் வக்ரியாயிருப்பதால், முற்போக்குக்குத் தடை ஏற்படும்; ஆனால் குருவின் பார்வை ஏற்பட்டிருப்பதால் தடைகள் நீங்கி சுபிட்சம் வளரும். குரு தனது காலில் காணப்படுவதால் ஹிருதயத் தூய்மையும், பகவத் கைங்கரியத்தில் ஈடுபாடும் உண்டாகும். வண்டி, வீடு முதலியவற்றில் முன்னேற்றம் சுமார் எனலாம். தொழில் விருத்தியாகும். பிப். 22, 23 தேதி

களில் சத்ருக்கள் பணிந்துவிடு வார்கள். மார். 2, 3, 4 தேதிகளில் பதவி, சம்பளம் விஷயமாக மேலதிகாரிகளைப் பேட்டிகண்டு பேசுதல் கூடாது. அதிர்ஷ்ட நாட்கள்:- பிப். 17, 24, 25, மார். 4 தேதிகள். சந்திராஷ்டமம்:- மார். 9உ புதன் காலை 9 மணி முதல் 11உ வெள்ளி மாலை 6½ மணி வரை உண்டு. சதயம் ந-பி-கு, தன லாபத்திற்குக் குறைவில்லை; தொழிலில் முற்போக்குண்டு; வீடு, நிலம் இவைகளில் சாதகநிலைதென்படுகிறது. பூரட்டாதி ந-பி-த, தனப்ராப்திகள் சுமார்; தொழிலில் லாபம் குறையும்; பிரயாசையால் சொற்ப லாபம் உண்டு.

---

மீன ராசி:- (பூரட்டாதி 4-ம் பாதம்முதல் உத்திரட்டாதி, ரேவதி முடிய) இலக்கினாதிபதி குரு 4ல் வக்ரீயாயிருப்பதால் வண்டி, வீடு, நிலம் இவற்றில் முற்போக்கில்லை. களத்திர பீடை உண்டு. பரிகாரத்தால் விலகும். தொழிலில் லாபமும் எதிர்பார்த்தவைகளில் அனுகூலமும் ஏற்படும். பிப். 24, 25, 26 தேதிகளில் சத்ருக்கள் மண்ணைக்கவ்வுவார்கள். மார். 4, 5, 6 தேதிகளில் பதவி சம்பளம் சார்பில் மேலதிகாரிகளைக்கண்டு பேசவேண்டாம். அதிர்ஷ்ட நாட்கள்:- பிப். 17, 20, 21, மார். 4, 9, 10 தேதிகள். 2 சந்திராஷ்டமங்கள்:- பிப். 12உ சனி காலை 10 மணி முதல் 14உ திங்கள் இரவு 8 மணி வரையும், மார். 11உ வெள்ளி மாலை 6½ மணி முதல் 13உ ஞாயிறு முடியவும் ஆக 2 சந்திராஷ்டமங்கள் உண்டு. உத்திரட்டாதி ந-பி-த, தொழிலில், உத்தியோகத்தில் பிரபல யோகமுண்டு; லாபமுமுண்டு. மார். 8உ முதல் 11உ வரை களத்திர சுகமும், ஒற்றுமையும் உண்டு. ரேவதி ந-பி-த, இம்மாதம் முதல் வாரத்தில் தன ப்ராப்திகளும், வாக்கு நாணயமும் உண்டாகும்; குடும்பத்தில் சேர்மை உண்டு; தொழிலில் சிற்சில இடர்ப்பாடுகளுடன் முன்னேற்றம் காணலாம்; வண்டி, வீடு, நிலம் இவற்றில் சுமாரான யோகம் உண்டு.

---

☞ ராதகாலம் எவ்வளவு கெட்டதோ, அவ்வளவு கெட்டவை சந்திராஷ்டம நாட்கள். சுபகாரியங்களையும் புது முயற்சிகளையும் இக்காலங்களில் முற்றிலும் நீக்கவும். பெண்கள் நகை, புது ஆடை முதலியன சந்திராஷ்டம காலங்களில் அணிதல் கூடாது. இவைகளை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இவற்றின்படி அனுஷ்டிக்கவும். — ஆசிரியர்.

---

## அறிஞர்களின் அமுதமொழிகள்.

உண்மையான ஆறு சேவகர்கள் எனக்கு உண்டு. எனக்குத் தெரிந்துள்ளவை யாவும் அவர்கள்தான் கற்றுக்கொடுத்தார்கள். அவர்கள் பெயர் என்ன, எப்போது, எங்கே, எப்படி, ஏன், யார் ஆகும்.

— ருத்யார்ட் கிப்லிங்.

## கைப்பெட்டியின் மர்மம் — ஓர் அபூர்வமான கதை.

இக்கதை முழுதும் 24 பக்கங்களில் ஞானகுரு வைகாசி மலரில் வெளியாகும். மலர் விலை 6 அணா. வாங்கத்தவறாதீர்கள்.


ஒரு பத்தி ஒரு அங்குல விளம்பரங்கள்: தடவைக்கு அங்குலம் ரூ. 2.

எல்லாவித கைத்தறிகளுக்கு வேண்டிய உயர்தரமான அச்சு, விழுது, நாடா, தார்குச்சி முதலிய நெசவு சாமான்கள் கிடைக்குமிடம்:
சக்தி டெக்ஸ்டைல்ஸ் ஏஜன்ஸி,
87A, கீழவாசல், மதுரை.

---

எல்லாவிதமான பல்புகள் மற்றும் எலக்ட்ரிக் சாமான்கள் கிடைக்குமிடம்:
பாப்புலர்
எலக்ட்ரிக் கம்பெனி,
மஞ்சணக்காரத் தெரு, மதுரை.

---

தப்பாளி
S. ராதாகிருஷ்ணய்யர் & கோ.,
சூரத், ஜான்னடி & பிரிண்டிங் ஜவுளி தயாரிப்பவர்கள்
சாயத்திற்கு உத்திரவாதம்.
203, கீழவெளிவீதி, மதுரை.

---

M.A.K. வெங்கட்ராமன் செட்டியார்,
ஜோதி ஐயப்பன் பிராண்டு
சேமியா பாக்டரி,
13, எழுகடல் அக்கிராரம்,
மதுரை.

---

சிற்றுண்டிகளுக்கு சிறந்த இடம்
"நாராயணா"
ஸ்வீட், காரம், காபி & டீ ஸ்டால்,
80, தெற்குமாசி வீதி, மதுரை.

---

— ஸ்தாபிதம் 1911. —
எங்கள்
குளுகோ & பார்லி
பிஸ்கோத்துக்கள் குழந்தைகளுக்கு சிறந்தவை.
ஆர். எம். எஸ். & சன்ஸ்,
பேக்கர், டவுன்ஹால் ரோடு. மதுரை.

---

ரெடிமேட் ஆடைகளும் மில் ஜவுளிகளும் விலை சகாயமாய்க்கிடைக்கும்.
"பிரபாத்" ரெடிமேட் ஸ்டோர்,
2, அம்மன் சன்னதி, மதுரை.

---

ரம்யா
ஸ்ரீ மீனாக்ஷி ஸ்டோர்,
புதுப்பட்டு & நூல் ஜவுளி வியாபாரம், விலை மலிவு. சாயத்திற்கு உத்திரவாதம்,
26, மஹால் 4-வது தெரு, மதுரை.

---

"TARZO" PRODUCTS.
★ பவுண்டன் பேனா இங்க்
★ சீல் அரக்கு
★ நீலகிரி தைலம்
★ டார்ஜோ பற்பொடி
வாங்கி உபயோகியுங்கள்.

---

N. G. கிருஷ்ணமாச்சாரி & பிரதர்ஸ்,
சூரத், ஜான்னடி ஜவுளி தயாரிப்பாளர்கள்,
உத்திரவாதமுள்ள கெட்டிச்சாயம்.
34, கான்சாமேட்டுத் தெரு,
(நியூ சினிமா சமீபம்) மதுரை.

---

காயத்திரி ஸ்டோர்,
புதுப்பட்டு & நூல்ஜவுளிவியாபாரம்,
விலை சகாயம் சாயத்திற்கு உத்திரவாதம்
31, மஹால் 5வது ஹனுமார்கோவில் தெரு,
— மதுரை. —

---

P. S. A. சுந்தரகோபாலய்யர்,
—: புரோப்ரைட்டர் :—
சாந்தாராம் ஸ்டோர்ஸ்,
நூதன புதுப்பட்டு & நூல் ஜவுளி வியாபாரம்,
2, லக்ஷ்மிபுரம் 1-வது தெரு, மதுரை.

207941

## ரிஷிகேசம், சுவாமி சிவானந்தரின் உபதேசப்படி,

## 'ஞானகுரு' ஆசிரியர் அனுஷ்டித்துவரும் முக்கிய சாதனைகள்

(1) 1928ஆ முதல், காபி, டீ, மூக்குத்தூள், புகையிலை, சுருட்டு, தாம்பூலம் உபயோகிப்பதில்லை. 1947ஆ முதல் சினிமா பார்ப்பதில்லை.

(2) கரஆ ஆடிமீ 26உ (10-8-51, வெள்ளிக்கிழமை (வரலக்ஷ்மி விரதம்) முதலாக, காலையில் கண் விழித்தது முதல், பூஜை பூர்த்தியாகும் வரை தினசரி மௌன விரதம்.

(3) மௌன விரதத்திலே ஸ்ரீமத்பகவத்கீதை, ஸ்ரீவிநாயகர் அகவல், ஸ்ரீ கந்தர்சஷ்டி கவசம், திருவாசகம் ஆகிய 4 நூல் தினசரி பாராயணம்.

(4) இஷ்ட உபாசனா மூர்த்தி சுப்பிரமண்ய ஸ்வாமி உள்பட தினசரி தசமூர்த்தி ஜெபம் தியானம். தினசரி உலக க்ஷேமப் பிரார்த்தனை.

(5) ஏகாதசி, துவாதசிதோறும் விரதம். சர்க்கரை, உப்பு, புளி, மிளகாய், நல்லெண்ணெய், கடுகு முதலியவை (கார்த்திகை விரதத்திலும்) மத்தியானம் வரை சேர்ப்பதில்லை. பெருமாள் கோவிலுக்கும், ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் கோவிலுக்கும் மௌனமாய் சென்று இறைவனை வழிபடுவார்.

(6) கார்த்திகைதோறும் காலையில் மௌனமாய் திருப்பரங்குன்றத்திற்குப் பாதசாரியாகச் சென்று, முருகன் தரிசனம், பூஜை, கிரிப்பிரதக்ஷணம் செய்து, 2000 ஷடாக்ஷர மந்திரம் மானஸிகமாக ஜபம் முடித்துவிட்டு மௌனம் கலைதல். மத்தியானம் வண்டியேறி வீட்டுக்குத் திரும்புவார்.


திருப்பரங்குன்றம்,
K. M. K.
கார்த்திகேயன் கம்பெனியின்
சந்தனாதி அரைக்கீரை விதை குளிர் தாமரை, மிளகாய் தைலங்கள் சுத்தமான எள் எண்ணெயில் தயார் செய்தது. மற்றும் உள்ள வாசனை சாமான்களை உபயோகியுங்கள்.

— பிளாஸ்டிக் —
ஸைன்போர்டுகள், கார் நம்பர் போர்டுகள், புஷ் சர்ட்டு & சர்ட்டு பட்டன்கள்.
தயார் செய்யுமிடம்:-
ஜூபிடர் பிளாஸ்டிக் ஒர்க்ஸ்,
11, லெட்சுமிபுரம் குறுக்குத்தெரு,
= மதுரை. =

"நெப்போலியன் கியூர்"
நிகரில்லாத வெட்டை ரோக நிவாரணி ARTERIES நாடிகளில் துரிதமாகச் சென்று ரத்த சுத்தி செய்வதில் இணையற்றது
சாந்தி வைத்திய நிலையம்,
250, கிருஷ்ணாபுரம் 2 நீர். சந்து,
ராமநாதபுரம் ரோடு, மதுரை.

சகலவிதமான வியாதிகளுக்கும் சிறந்த
மலையாள ஆயுர்வேத மருந்துகள்
கிடைக்குமிடம்:—
மலையாள மெடிக்கல் ஹால், (Regd.
189, வக்கீல் புதுத்தெரு,
(தபால்பெட்டி நெ. 27), மதுரை.


கூப்பனைப் பூர்த்தி செய்தோ, தனிக்காகிதத்தில் எழுதியோ அனுப்பவும்.

ஞானகுரு முருகன் திருவருள் ஆறு எண்கள் கூட்டல் போட்டி—3

விடை கூப்பன் முடிவு தேதி 31—3—55உ

— — — — — —

பெயர் ........................

விலாசம் ........................

ஊர், ஜில்லா ........................

...யாருடைய சரியான விடை அனுப்பாவிடில், ஒரு எண் அல்லது 2 எண் வறுள்ள ஒரு விடைக்கே ரூபாய் மூன்று பரிசு அளிக்கப்படும்.

...னகுரு காரியாலயத்திலுள்ள போட்டிப்பெட்டியில் விடை கவர்களை போடலாம் ...வசக் கட்டணமில்லை! உங்கள் அதிர்ஷ்டத்தைப் பரீக்ஷியுங்கள்!!

## ஞானகுரு முருகன் திருவருள் ஆறு எண்கள் கூட்டல் போட்டி-3.

## பரிசு 18,000 — புண்ணிய அதிர்ஷ்ட அணுக்கள்!

[ரொக்கம் ரூ. 3.]

—: முடிவு தேதி:- 31—3—55உ குருவாரம் மாலை 6 மணி :—

**1—2—3—4—5—6** — இந்த **6** எண்களை மட்டும் இடமிருந்து வலம் எப்படியேனும் மாற்றி எழுதலாம். கூட்டுத்தொகை **21** வரும். இதுவே ஒரு விடை ஆகும்.

நிபந்தனைகள்:— (1) ஒருவர் ஒரு விடை மட்டும் முன்பக்கத்திலுள்ள அச்சுக்கூப்பனிலோ, தனிக் காகிதத்திலோ, தபால் கார்டிலோ மையினால் எழுதி அனுப்பலாம். கட்டணமில்லை. பலர் சேர்ந்து அவரவர் விடையை ஒரே கவரில் வைத்து அனுப்பலாம். (2) 31—3—55உ இரவு 7 மணிக்கு ஞானகுரு காரியாலயத்தில் திருவுளச்சீட்டுக்கள் மூலம் சரியான விடை நிர்ணயிக்கப்படும். அச்சமயம், ஞானகுரு அபிமானிகள் எல்லோரும் காரியாலயத்திற்குள் வந்து பார்க்கலாம். (3) பல சரியான விடைகளுக்கு புண்ணிய அதிர்ஷ்ட அணுக்கள் பகிர்ந்தளிக்கப்படும். புண்ணிய அதிர்ஷ்ட அணுக்கள் என்றால், உள்ளங்கனிந்த அன்புடன் நேயர்களுக்கு வழங்கப்படும் முருகன் திருவருள் பிரசாத மதிப்பு எண்கள் (Lucky Marks) ஆகும். (4) 3—4—55உ ஆதிவாரம் இரவு 7 மணிக்கு பல சரியான விடைகளுள் ஒன்று திருவுளச் சீட்டாக எடுக்கப்படும். அதன் விலாசத்திற்கு 4—4—55உ சோமவாரம் ரூபாய் மூன்று மணியார்டர் செய்யப்படும். (5) இப்போட்டியின் சரியான விடையும், பரிசு பெற்றவர்கள் ஜாபிதாவும் 14—4—55உ ஞானகுரு புது வருஷப் ...றப்பு மலரில் வரும். விலை 6 அணா. ஸ்டாம்புகள் கூடா. மலருக்... ...க எழுணா M. O. செய்வோர் விடையை M. O. கூப்பனிலேயே எழுதலாம். (6) தபாலில் தவறும் விடைகளுக்கு மானேஜர் ஜவாப்தாரியல்ல. இப்போட்டி சம்பந்தமான சகல விஷயங்களுக்கும் மானேஜர் தீர்ப்பே முடிவானது.

மானேஜர், ஞானகுரு காரியாலயம், (ஆறு எண்கள் போட்டி-3)
5, கான்பாளையம் 3-வது தெரு, கீழவெளிவீதி, மதுரை. (S. I.)

## ஞானகுரு முருகன் திருவருள் ஆறு எண்கள் கூட்டல் போட்டி-2.

திருவுளச் சீட்டுப்படி நிர்ணயிக்கப்பட்ட சரியான விடை:—

**5—3—1—4—2—6** (கூட்டுத்தொகை **21**)

...ரும் சரியான விடை அனுப்பவில்லை. — மானேஜர்: "ஞானகுரு".

முருகன் திருவருள் வேல் (வெள்ளி) ரூ. 6. முருகன் கவசம் ரூ

☞ ஜாதகம் கணிக்க, பிறந்த ஊர், ஹு, மா, வ, மணி குறிப்பி

நேரில் ஜாதகம் பார்ப்பதில்லை. முழுத்தொகையும் அனுப்புக. வி.பி.கிடை

(ஸ்தாபிதம் 1941 ஹு) ஆபீஸ் அலுவல் காலை 7–10, பிற்பகல்



# முருகன் ஜோதிஷ ஆஸ்ரமம்

S. G. இராமலிங்கம், B. A., ஜோதிஷர், சொற்பொழிவாளர்

இராஜயோகி, ஹிருஷிகேஸ், சுவாமி சிவானந்தரின்

சிஷ்யர் & "ஞானகுரு" மாதப்பத்திரிகையின் ஆசிரியர்.

"ஞானகுரு" ஆபீஸ், கான்பாளையம் 3, (கீழவெளிவீதி) மதுரை.

(1) ராசி நவாம்சத்துடன் ஜாதகம் கணிக்க ரூ. 5. இலக்கின ஸ்புடத்துடன் எழுத ரூ. 7. (2) நவக்கிரக ஸ்புடங்களுடன் எழுத ரூ. 15. (3) த வர்க்கம், அஷ்டவர்க்கம், பாவச்சக்கரம் முதலியவைகளை பொதுப்பலன்களுடன் எழுத ரூ. 51. (4) எதிர்கால 1 முதல் 5 கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 2. 12 மாதப் பலன் எழுத ரூ. 5. ஜாதகம் அல்லது எழுது நேரம் தேவை. (5) ஒரு ஜாதகத்திற்கு ஆயுள், களத்திரம், புத்திர யோகம், அவயோகம், மாதா பிதா கர்மம் முதலிய 6 அம்சங்களுக்கு பதில் எழுத ரூ.10. டி ஒரு அயிட்டத்தை மட்டும் சாந்தி பரிகாரத்துடன் விளக் எழுத ரூ. 10. (6) எதிர்கால ஒரு திவசக்கு புக்திவாரி பலன் எழுத ரூ. 10

☞ முகூர்த்த நிர்ணயமும் விவாகப் பொருத்தங்களும் கவனிக்கப்படமாட்ட



## உயர்ந்த ஸ்ரீ முருகன் ரெடிமேட் ஆடைகள்

பனியன், ஜவுளி ரகங்கள்,

SRI MURUGAN DRESS MFG. CO. MADURA

காற்று தலையணை & கொசு வலைகள்.

ஏராளமாக ஸ்டாக் செய்து குறைந்த விலைக்கு விற்பனை செய்கிறோம்.

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்:-

## ஸ்ரீ முருகன் டிரஸ் ஸ்டோர்ஸ்,

**2 & 104, அம்மன் சன்னதி, மதுரை.**

கிளைகள்:- தஞ்சாவூர், கும்பகோணம் & காரைக்குடி.


Edited & Published by S. G. Ramalingam, B. A., and Printed at t
Rajeswari Press, Palace Road, Madurai:-1955.